அப்படிச் செல்லவில்லையானால், இப்போது அதிகமாக உற்பத்திச் செய்யப் படுகிற வெல்லத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசாங்கம் திட்ட மிட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, மூலக் கேள்வி பனைவெல்லத்தைப்பற்றியது, கரும்பிலிருந்து எடுக்கப்படுகின்ற வெல்லத்தைப் பற்றிக் கேட்பதாகயிருந்தால், அதற்கு தொழில்துறை அமைச்சர் அவர்கள் தான் பதிலளிக்க வேண்டும்.

திருமதி ஜோதி. வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, பனைவெல்லத்திலிருந்து பல பொருள்கள் செய்கிறார்கள். இவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குப் பெரும் வாய்ப்பு இருக்கிற காரணத்தால் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வார்களா? வங்கியில் பணம் கடனாகப் பெற்ற காரணத்தால், உற்பத்தியாளர்கள் தங்களுடைய உற்பத்தியை கோவாபரேடிவ் சொசைடி மூலமாகத்தான் விற்க வேண்டுமென்று ஏதாவது நிபந்தனை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, பனைவெல்ல உற்பத்தியை கூட்டுறவுத் துறையில் நடத்தியபோது, பனைவெல்லத்தின் விலை ஏறுமானால் அதன் லாபம் தங்களுடையது என்று சொன்னார்கள். விலை இறங் குமானால் நட்டம் கூட்டுறவுத் துறையின் தலையில் வைக்கப்பட்டது. இதன் காரணமாக ஒன்றே முக்கால் கோடி ரூபாய் வாராக் கடனாக இருக்கிறது. இப் போது புதிய முறையில், ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் பெற்று, அதை மத்திய வங்கியின் மூலமாக, கொடுக்கின்ற கடன் திரும்பி வருகின்ற முறையில், கொடுப்பதற்கான வழிவகைகளைச் செய்திருக்கிறோம்.

திரு. இரா. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, பனையிலிருந்து கிடைக்கும் பனைத் தும்பு, ஈர்க்கு போன்ற பொருள்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, பனைத் தும்பும், ஈர்க்கும் அவ்வாறு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கள்ளிறக்குவோர்களுக்கு இழப்பீடு

*283 வினா—**திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

விபத்துக்குள்ளாகும் தென்னை மரமேறும் தொழிலாளிகளுக்கு நஷ்டஈடு கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இல்லை.

திரு. பி. எஸ். மணியன்: தலைவர் அவர்களே, தற்போது மதுவிலக்கு ரத்து செய்யப்பட்ட காரணத்தால் லட்சக்கணக்கான தொழிலாளிகள் தென்னை மரம் ஏறக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய பாதுகாப்புக்கு ஊக்கம் கொடுக்கிற நிலையில், விபத்துக்குள்ளாகிற தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது பற்றி அரசு மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, தென்னை மரம் ஏறுகிறவர்கள் கள் இறக்குவதற்காக ஏறுகிறார்கள். கள் இறக்குவதற்காக தொழிலாளி மரம் ஏறி, விபத்துக்குள்ளானால், சட்டப்படி கன்ட்ராக்டர்கள்தான் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். கன்ட்ராக்டர்கள்தான் தொழிலாளிகளோடு இது விஷயமாக ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I know from the Hon. Minister whether there is a proposal to give compensation to the persons who meet with accidents even though they are not members of a co-operative society?

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, the Government have already passed orders in that respect, in accordance with the proposal mentioned by the hon. Members.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது, கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக இல்லாதிருந்தாலும் கூட அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வழி செய்திருக்கிறது என்று கூறினார்கள். கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக இல்லாத முறையில் எத்தனைபேருக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், எத்தனை பேர் என்று சொல்ல முடியும்.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, தென்னை மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு இடத்திற்கு இடம் கூலி வித்தியாசம் இருக்கின்ற காரணத்தினாலே அதை ஒழுங்குபடுத்துவதற்கு நம்முடைய அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தொழிலாளரின் கூலியைப்பற்றித் தனிக் கேள்வி எழுப்புவதாக இருந்தால் தொழிலாளர் நல அமைச்சரிடம் கேட்கவேண்டும்.

பழம் ஏற்றுமதி

*284 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1971-72-ம் ஆண்டில், தமிழ்நாட்டிலிருந்து சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஆரஞ்சின் மதிப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டில், இதுவரையிலும், தமிழ்நாட்டிலிருந்து, சிங்கப்பூருக்கு ஆரஞ்சு ஏற்றுமதி செய்யப்படவில்லை. ஆனால் 1970-71-ஆம் ஆண்டில் (ஏப்ரல் 1970 முதல் மார்ச்சு 1971 முடிய) 3.987 மெட்ரிக் டன் எடையுள்ளதும், ரூ. 7,974 (இன்ஷ்யூரன்ஸ் மதிப்புடன் கூடிய விலை) மதிப்புள்ளதுமான ஆரஞ்சுப் பழங்களை சென்னையிலிருந்து சிங்கப்பூருக்கு எஸ்.எஸ். ரஜுலா என்ற கப்பல் மூலம் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனின் சென்னையிலுள்ள கிளை ஏற்றுமதி செய்துள்ளது. 1971-72-ஆம் ஆண்டின் ஆரஞ்சு ஏற்றுமதி, அப்பழங்களை சிங்கப்பூரில் உண்ணுவோரது விருப்பத்தையும் அப்பழங்களின் விலை மலிவையும் பொறுத்தது. இது இனிமேல்தான் அறியப்படவேண்டிய தொன்றாகும்.